# கீழ்வேளூர்
# மீனாட்சிசுந்தரம் பிள்ளை
# பாடல்கள் ஐம்பது

தொகுப்பாசிரியர்கள்

திரு து.ஆ.தனபாண்டியன் - பேராசிரியர்
திருமதி ஞானா குலேந்திரன் - இணைப்பேராசிரியர்
திருமதி இ. அங்கையற்கண்ணி - விரிவுரையாளர்

இசைத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

# கீழ்வேளூர்
# மீனாட்சிசுந்தரம் பிள்ளை
# பாடல்கள் ஐம்பது

தொகுப்பாசிரியர்கள்

திரு து.ஆ.தனபாண்டியன் - பேராசிரியர்
திருமதி ஞானா குலேந்திரன் - இணைப்பேராசிரியர்
திருமதி இ. அங்கையற்கண்ணி - விரிவுரையாளர்

இசைத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

ISBN:81-7090-183-9

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு: 144

திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி-அக்டோபர் 1991

நூல் : கீழ்வேளூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பாடல்கள் ஐம்பது

தொகுப்பு : இசைத்துறை

பதிப்பு : முதற்பதிப்பு 1991

விலை : உரூ. 25/-

அச்சு : தமிழ்ப் பல்கலைக்கழக அச்சகம், தஞ்சாவூர்.



கீழ்வேளூர் எஸ். மீனாட்சிசுந்தரம் பிள்ளை

தோற்றம்
10-2-1906

மறைவு
2-4-1971

**சி. பாலசுப்பிரமணியன்,**
எம்.ஏ., எம்.லிட்., பி.எச்டி.;
துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005

# அணிந்துரை

கீழ்வேளூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களை நான் நன்கு அறிவேன். 1958-ஆம் ஆண்டு தொடங்கி சென்னைத் தமிழ் இசைச்சங்கத்தின் பண் ஆராய்ச்சிக் கூட்டத்தில் பெரியவர்கள் பலருடன் - இயற்றமிழ் வித்தகர்கள், இசைப் பேரறிஞர்கள், நாடகச்செல்வர்கள், நாட்டியப்பேரொளிகள் பலருடனும் மகிழ்ந்து பழகும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அண்ணாமலை மன்றம் பல்வேறு துறை அறிஞர்களை ஆண்டுதோறும் கண்டுவருகிறது. ஐம்பது அறுபதுகளில் கீழ்வேளூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பண் ஆராய்ச்சிக் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள். இசைத்தொடர்பான தம் கருத்தை எடுத்து மொழிவார்கள். நூற்றுக்கணக்கான தமிழ்ப்பாடல்களை இயற்றித் தமிழ் இசைக்கு வாழ்வும் வளமும் சேர்த்துள்ள அவர்கள் இசை வகுப்பதிலும் தலைசிறந்து விளங்கினார்கள். அவர்கள் சுரம் அமைத்த 'ரக்தி இராகங்கள்' அறிஞரால் பாராட்டப் பெறுவனவாகும். பழைய இசை மரபைக்காத்து அம்மரபின் வழியே பாடல்கள் இயற்றிச் சுரதாளக் குறிப்புகளும் கண்ட அவர் இசை உலகிற்கு ஒரு நற்பேறாய் வாய்த்தவர் ஆவர். பழைய மரபைக் காக்கும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் அவர் இயற்றிய பாடல்களில் ஐம்பது பாடல்களைத் தேர்ந்தெடுத்து அவர்களே அப்பாடல்களுக்கு எழுதி வைத்துள்ள சுரதாளக் குறியீடுகளையும் கொண்டு இந்நூலை வெளியிடுகின்றது.

என் அன்பு நண்பரும் தமிழ் இசைச்சங்கத்தில் தொடக்க நாள் தொட்டுத் தொண்டாற்றி வருபவரும் இசைமணியும் கீழ்வேளூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் உறவினருமான திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், நான் தமிழ் இசைச் சங்கம் செல்லும்போதெல்லாம் இப்பாடல்கள் வெளிவரவேண்டுவதன் அவசியத்தை வற்புறுத்தினார்கள். அருமையும் இனிமையும் இணைந்த இப்பாடல்கள் சுரதாளக் குறிப்புகளோடு நூல்வடிவில் இப்போது வெளிவருகின்றது. இப்பாடல்களை எங்களுக்கு அளித்து உதவிய கீழ்வேளூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் மகனார் திரு கீ.மீ. ஞானசேகரன் அவர்களுக்கு எங்கள் நன்றி. இந்நூல் வெளிவர உறுதுணை புரிந்த தமிழ்ப் பல்கலைக்கழக இசைத்துறையினர்க்கு என் நன்றி.

தமிழ்ப் பல்கலைக்கழகம் முத்தமிழ் வளர்ச்சிக்கு முறையாகத் தொண்டாற்றிவருகிறது; இனியும் முழுமையாகத் தொண்டாற்றிவரும் என்று நான் உறுதி கூறிக் கொள்கின்றேன். தமிழிசை உலகம் இந்நூலினைப் பெற்றுப் பயன் கொள்ளுவதாகுக!

23-10-91

சி. பாலசுப்பிரமணியன்

# முன்னுரை

கீழ்வேளூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் நூற்றுக்கணக்கான தமிழ்ப் பாடல்களை இயற்றித் தமிழிசைக்கு வளஞ்சேர்த்துள்ளார்கள். சொல் நயமும் பொருள் வளமும் கொண்ட தம்முடைய பாடல்களுக்குத் தோடி, சங்கராபரணம், தன்யாசி, பியாகடை போன்ற நுட்ப சுருதிகள் கொண்ட சுரங்களுடன் அமைந்த இன்சுவை இராகங்களில் ('ரக்தி இராகங்கள்') இவரே மரபு முறையில் இசை அமைத்துள்ளது பாராட்டுதற்குரியது.

இவர் இயற்றியுள்ள பாடல்கள் சுரதாளக் குறிப்புகளுடன் அச்சிடப்பட்டு நூல்களாக வெளியிடப் படாவிட்டால் அருமையான அந்த இசை மரபு அழிந்துவிடக்கூடும். அம்மரபு பாதுகாக்கப்பட வேண்டும் என்னும் நோக்கோடு பிள்ளையவர்களின் பாடல்களுள் சிலவற்றை ஒரு நூலாக வெளியிடவேண்டும் எனத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மாண்புமிகு முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் என்னைப் பணித்துள்ளார்கள். அவற்றை ஒரு நூலாக வெளியிடுவதற்குப் பிள்ளையவர்கள் இயற்றிய பாடல்களில் ஐம்பது பாடல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அவர்கள் எழுதி வைத்துள்ள பாடல்களையும் சுரதாளக் குறியீடுகளையும் ஒப்புநோக்கி, நூல்வடிவில் வெளியிடுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஐம்பது பாடல்களுள் தலைவன், தலைவி உறவைச் சித்திரிக்கும் இரண்டு பதங்களும் உள்ளன. இப்பாடல்களிற் பெரும்பான்மையானவை இக்கால வழக்கில் உள்ள இராகங்களிலேயே இசை அமைக்கப்பெற்றுள்ளன. இசைக் கலைஞர்கள்பால் மிகுதியும் வழக்கிலில்லாத நாடகப்பிரியா (மே.க.எண்.10) கோகிலப்பிரியா (மே.க.எண் 11) ஆகிய மேளகர்த்தா இராகங்களிலும் அம்சவிநோதினி (மே.க.எண்.29) கன்டகௌளை (மே.க.எண் 22), புவனகாந்தாரி (மே.க.எண் 20), ஸ்ரீ மனோகரி (மே.க.எண்.22) மந்தாரி (மே.க.எண் 50) ஆகிய அரிய கிளை இராகங்களிலும் அவர் இயற்றியுள்ள கீர்த்தனைகள் இந்நூலில் தரப்பட்டுள்ளன. இந்நூல் இசைபயிலும் மாணவர்களுக்கும் இசைவாணர்களுக்கும் பெரிதும் பயன்படும்.

தமிழ்ப் பண்ணிசைப் பாதுகாப்பு அறக்கட்டளை நிதியிலிருந்து இந்நூலை அச்சிடுவதற்கு வேண்டிய நிதியுதவியினை அளித்து, எனக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்த தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மாண்புமிகு முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் பாடல்களை எங்களுக்கு அளித்துதவிய அவருடைய குமாரர் திரு. கீ.மீ. ஞானசேகரன் அவர்களுக்கு எனது நன்றி உரியதாகும்.

பாடல்களைத் தேர்ந்தெடுக்கும் பணியிலும் இப்பாடல்களிலும் சுரதாளக்குறிப்புகளிலும் காணப்படும் அச்சுப்பிழைகளைத் திருத்தும் பணியிலும் உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் என்னுடன் உழைத்து, இந்நூலை உருவாக்கும் பணியில் ஆர்வமுடன் செயலாற்றிய இணைப்பேராசிரியை முனைவர் திருமதி ஞானா குலேந்திரன் அவர்களுக்கும் விரிவுரையாளர் முனைவர் திருமதி இ. அங்கயற்கண்ணி அவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மிகக் குறுகிய காலத்தில் இந்நூலை அச்சிட்டு வெளியிடுவதற்கான ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்துதவிய தமிழ்ப் பல்கலைக்கழக பதிப்புத்துறை உதவி இயக்குநர் புலவர் சி. இளங்கோவன் அவர்களுக்கும் அவர்களின் உதவியாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அன்புடன்

தஞ்சாவூர்.
அக்டோபர் 1991.

து. ஆ. தனபாண்டியன்,
இசைத்துறைத்தலைவர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

# கீழ்வேளூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை வாழ்க்கை வரலாறு

தமிழகத்தின் நெற்களஞ்சியமாகவும் கலைக்களஞ்சியமாகவும் பண்டு தொட்டே திகழும் தஞ்சை மாவட்டம், நாகப்பட்டினம் வட்டத்தில் உள்ள (தாலுகா) கீழ்வேளூர் (கீவளூர்) என்னும் கிராமத்தில் திரு. ஆர். சுப்பராயப்பிள்ளை என்பவருக்கும் திருமதி மீனாட்சி அம்மையாருக்கும் அருந்தவப் புதல்வராக திரு. மீனாட்சி சுந்தரம் 1906ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 10ஆம் நாள் தோன்றினார். இளமையில் திரு. கருணையானந்த ஞானபூபதி என்னும் ஆசிரியரிடம் தொடக்கக் கல்வி கற்றார். தம் ஒன்பதாம் வயதில் சீர்காழி தேவாரப் பாடசாலையில் சேர்ந்து திரு. ஆபத்தோதாரண தேசிகர் அவர்களிடம் தமிழ்மறையும் இசையும் பயின்றார். திருப்பாப்புலியூரிலிருந்த திரு. நடராச தேசிகர் அவர்களிடமும் தேவாரத் திருவாசகப் பாடல்களைக் கற்றுத் தேர்ந்தார்.

திருமுறைக் கல்வியை முடித்துக்கொண்டு கீழ்வேளூர் சங்கீதவித்வான் இராமச்சந்திர அய்யர் அவர்களிடமும் நாதசுர இசைக்கலைஞர்கள் சுப்பையாபிள்ளை, நாகப்பட்டினம் சாரங்கபாணிப் பிள்ளை ஆகியோரிடமும் இசைப்பயிற்சி பெற்றுத் தம்முடைய இசைத்திறனை வளர்த்துக் கொண்டார். தமது பதினேழாம் வயதில் இவர் சென்னைக்கு வந்து நாமக்கல் நரசிம்ம ஐயங்காரின் சீடரான சேஷ ஐயங்காரிடம் இரண்டு ஆண்டுகள் குருகுலவாசம் செய்து, தரமான இசை நிகழ்ச்சிகள் நிகழ்த்தும் அளவிற்குச் சிறந்த கலைஞராகத் திகழ்ந்தார். சென்னையில் இருந்தபோது பல இசைமேதைகளின் இசைநிகழ்ச்சிகளைக் கேட்டுத் தம்முடைய இசைப் புலமையை மேலும் வளமாக்கிக் கொண்டார். இசை இலக்கணம் பற்றிய நுட்பங்கள் அனைத்தையும் திரு. ஜி.வி. கோவிந்தராஜுலு நாயுடு அவர்களிடமிருந்து அறிந்து கொண்டார்.

தம்முடைய இருபத்தொன்றாம் வயதிலிருந்து இவர் பல்வேறு இடங்களில் இசைநிகழ்ச்சிகள் நிகழ்த்திப் பெயரும் புகழும் பெற்றார். இசையிலும் இயலிலும் தேர்ச்சி பெற்ற இவர் இனிய பல தமிழ்ப் பாடல்களை இயற்றி அவற்றைத் தமது இசை நிகழ்ச்சிகளிற் பாடி வந்தார். இவரது பாடல்களைக் கேட்ட இசை அன்பர்கள் இவரை ஊக்குவித்ததின் பயனாக இவர் மேலும் பல பாடல்களைப் புனைந்து தமிழன்னைக்கு அரும்பெருந் தொண்டாற்றியுள்ளார். இவருடைய பாடல்கள் இசை நயத்திலும் பொருள் வளத்திலும் சிறந்து விளங்குகின்றன.

1940ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடந்த பாடற்போட்டியில் கலந்து கொண்டு, வெற்றிபெற்றுப் பல்கலைக்கழகம் வழங்கிய ரொக்கப் பரிசினையும் "சங்கீத சாகித்திய வித்துவான்" என்ற பட்டத்தையும் பெற்றார். சென்னைத் தமிழ் இசைக் கல்லூரியின் முதல் முதல்வராகப் பணியாற்றிய பெருமை இவருக்குண்டு.

இவர் பெற்றுள்ள பிற பட்டங்கள் வருமாறு:

| ஆண்டு | வழங்கிய நிறுவனம் | பட்டம் |
|---|---|---|
| 1935 | திருச்சூர் கானசபை | கானவித்யா கலாமணி |
| 1936 | செம்பியன் மகாதேவி தேவதானம் | இன்னிசை அரசு |
| 1941 | தமிழ் இசைச் சங்கம் | இயல் இசைப்புலவர் |
| 1942 | கரந்தைத் தமிழ்ச் சங்கம் | இசைச்செல்வர் |
| 1965 | அடையாறு ஆரோக்கிய ஆஸ்ரமம் | சங்கீத ஜோதி |
| 1966 | சங்கீத நாடக சங்கம் | கலா சிகாமணி |

நூற்றுக்கணக்கான தமிழ்ப்பாடல்களை இயற்றி, அவற்றினை இனிய இராகங்களில் அமைத்து இசை அன்பர்களின் பாராட்டுக்களைப் பெற்ற கீழ்வேளூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் தமது அறுபத்தைந்தாம் வயதில் காலமானார்.

இராகம் : அரிகாம்போதி (28) பாடல் எண் 1 ஆ : சரிகமபதநிச்
தாளம் : ஆதி அ : ச்நிதபமகரிச

## பல்லவி

அமிழ்தினும் இனிய தமிழ்மொழியாலுனை
அர்ச்சனை செய்தேன் ஆண்டருள் வாயெனை

## அனுபல்லவி

கமழ்பொழில் சூழ்திருத்தணி கைமலை வேலனே
காத்தருள் வாயெனை கந்தா உமைபாலனே

## சரணம்

அன்பர் களுளமதில் அமர்ந்திடும் பொருளே
அனுபவத்தோரறியும் அறிவுடைத் தெருளே
என்பவப் பிணியொழித் தின்புற அருளே
இன்சொல் மீனாட்சியின் பொன்சொல் ஏற்றருளே

## பல்லவி

; ; ; சாரீகாமாகா காரீகாரீ சா; ; ; / ; ; ; சாரீகாமா; /
அமிழ்தினும் இனிய ----- ----- தமிழ்மொழி
பா ; ; ; ; ; காமா//
யால் ------
அமிழ்தினும் இனிய /தமிழ் மொழி/
ரீ கா மா பா தா நீ ச்சா;//
யா ---- ல் உ_னை.
; ; ; ரீ கா மா பா; ரீகாமாபாதாநீச்சா; / ; ; ; ரீச்சாநீதபா, /
அர்ச் சனை செய் தேன் -- ஆண்டருள் /
ரீகாமாபா நீதா தாபா //
வா யெ - - - - -
மாகாரீ ___
னை

## அனுபல்லவி

; ; ; மாபாதாநீ ; ச்ா; ; ; ; நீச்ா; / ; ; ; ரீக்ாம்ாக்ா; / ரீக்ாக்ரிச்ா ; ரீகா ; //
கமழ்பொழில் சூழ் திருத்/ தணிகைம / லை __வே __ லனே //
; ; ; ரீ ; ச்ாச்ா; ச்ாநீநீதா தா,நி ச்ா; / ; ; ; தா நீ தாபாபா
காத்தருள் வா யெ னை -- கந் தா-
கா மாபாதா நீ தா தாபா
உமை - பா - -
மாகா ரீ
ல _ னே

## சரணம்

; ; ; தாநீதாபா; பா; பா ; ; தாதா; / ; ; ; தாநீதாபா; /
அன்பர்க ளு ள ம தில் அமர்ந்திடும்
காமாபாதா நீ தாபா;
பொ ரு ளே//
காமாபா காமா பாதாபா பா, த நீ ; ; தபமா; / ; ; ; காமாபாதாபா
அனுப வத் தோ ர றி யும் ----- ---அறிவுடைத்
; பாமா ; ; பா ; ; //
தெ ரு ளே

(அனுபல்லவிபோல் பாடவும்)

என்பவப் பிணியொழித் / தின்புற / அருளே //
இன்சொல் மீனாட்சியின் / பொன்சொல்ஏ / ற்றருளே //

இராகம் : கன்னடகெளளை பாடல் எண் 2 ஆ : சரிகமபநிச்
தாளம் : ஆதி அ : சநிதபமகச

(22 ஆவது மேளகர்த்தாவாகிய கரகரப்பிரியாவில் பிறந்தது)

## பல்லவி

சீலமோ வுனக் கிது தகுமோ
தேவி பார்வதி சிவகாமினி

## அனுபல்லவி

ஞாலமே நிறை ஞானபூரணி
நாதலோலினி வேத பாலினி

## சரணம்

பன்னெடு நாள்பாடிப் பணிந்த
பக்தன் மீனாட்சியின் பண்மொழியறிந்தும்
கன்னடகௌளா ராகமோகினி
கருணை புரியாதிருப்பதுவும். —

## பல்லவி

; ; ; நீ, தபா; மா / கா, சா, ரீ / கா, மா, மா //
சீல மோ உ / ன — க்கி / து த கு //
பா ; ; - : நீ,நி த பா; மா / கா, சா, ரீ / கா, மா, பா //
மோ சீ ல மோ உ / ன — க்கி / து த கு // மோ —
ப நிச்ா; - பாமாகா ; மா / கா, சா, ரீ / கா, மா, மா //
தேவி பார்வ / தி — சி / வ கா மி //
பா; ;
னி

## அனுபல்லவி

; ; ;-பாபாநீ; நீ / ச்ா; ; ரிக் / ம்ாக்ா; ம்ா//
ஞாலமே நி / றை ஞா / ன பூ _ ர //
க்ா, ச்ா, பாபாநீ; ரிச் / நீ ; ; நித / பம பா, மா,
ணி - நாதலோ லி னி வே த பா லி //
பா ; ;
னி-

## சரணம்

; ; ; பா பா பா; மா / பா; ; பா/ மாகா; மா //
பன்னெடு— / நாள் பா / டிப் பணிந் //
கா, சா, - ரீகாபாமகா, / கசாசா, ரீ / கா, மா, மா //
த - பக்தன்மீனா / ட்சியின்பண் / மொழிய
பா, பா, -
றிந்தும் (சீலமோ)

(அனுபல்லவிபோல் பாடவும்)

கன்னடகௌ / ளா ரா / கமோகி // னி
கருணைபு / ரி — யா / திருப்ப // தும் (சீ).

இராகம் : அடாணா
தாளம் : ஆதி

பாடல் எண்
3

ஆ : சரிமபநிச
அ : ச்நிதாபமபகாரிசா

(29 - ஆவது மேளகர்த்தாவாகிய தீரசங்கராபரணத்தில் பிறந்தது).

## பல்லவி

ஏனினம் தாமதம் அருள் செய்ய __ அம்பா உன்
இதயமும் கல்லோ இரும்போ சொல்லாய் அம்பா

## அனுபல்லவி

நானினம் உலகினில் நாதமழை பொழிய
ஞான உணர்வு தரயோசனையோ __ அம்பா

## சரணம்

நான்முகன் தனக்கு நாயகியே உயர்
ஞான பண்டிதர்க்கும் நீ கதியே
வான்மழை பொழிவது போலிசை பொழிய
வரமருள் மீனாட்சி சொல்வகையறி தாயே அம்பா

## பல்லவி

1. நீ; தாநீ தபா, மா பாதப / மப கம பா; / நிநிபா; பத//
ஏ னினம் தா__ மதம் __ / _ அருள்செய் / ய __ அம்பா //

2. நிச்ரிச் நிபதநீபா, மாபாதப / மப கம பா; / நிநிபா; பத //
ஏ __ னினம் தாமதம் __ / __ அருள்செய் / ய __ உன் //
நி,நிதபமத ரிகரிசரிம பாதா/; நிச்ரிச்ரீ / க்க்ரிச்நிபபத //
இ _ தய _ மும் _ கல் _ லோ / இரும் _ போ / சொல்லாய் அம்பா // ஏ

3. நிநிநிச் த பபத பமபத மா பாதப / மபகம பா ; / நிநி பா ; ; //
ஏ னினம்தா மதம் - அருள்செய் ய - - - - - - - -

## அனுபல்லவி

;, தபா ச்நீ ரீச்ா / ; , நிரிச்ரீ / ச்ாச்ாச்நிச்ா //
நா னினம் உலகினில் / நாத _ ம / ழைபொழிய //
; , தாதா தாதா தாதா / நிச்ரிச் நிபபா / நிநிபா; பத //
ஞான உணர்வு தர / யோ __ சனை / யோ __ அம்பா //

## சரணம்

; , தாததா தாதா தாதா / : , பதஸ்ா / பா; நிநிபம //
நான்முகன்தனக்கு / நாயகி __ / யே உ _ யர் //
பா, பாபபம ரீபம ரீசா / ;,கமபநீ / ச்நிதா ரீசா //
ஞானபண்டிதர்க்கும் / நீ_கதி / யே ____ //

(அனுபல்லவிபோல் பாடவும்)

வான்மழை பொழிவது / போலிசை / பொழிய //
வரமருள் மீனாட்சிசொல் // வகையருள் // தாயே அம்பா //

இராகம் : ஸ்ரீரஞ்சினி
தாளம் : ஆதி

பாடல் எண் 4

ஆ : சரிகமதநிச்
அ : ச்நிதமகரிச

(22-ஆவது மேளகர்த்தாவாகிய கரகரப்ரியாவில் பிறந்தது)

## பல்லவி

தத்துவ மறிந்திலனே சமரச
தத்துவ மறிந்திலனே

## அனுபல்லவி

சத்குருவை யடையத் தேடியலைந்திலேன்
சன்மார்க்க ஞானம் ஓர்ந்தும் உணர்கிலேன்

## சரணம்

சித்தர்கள் போலவே தேர்ந்து தெளிந்திட
சீவாத்மா பரமாத்மா சேர்ந்து சுகித்திட
பக்தர்கள்போலவே பாடிப் பணிந்திடப்
பக்தன் மீனாட்சி ஜென்மம் தேற்றியீடேற்றிட

## பல்லவி

, , நிதமா மாகா,ரி ரீ / சா ; ; கா / மா , தநிச்சா //
தத்துவ மறிந்தில / னே ச / ம ர __ ச //

;,நீதமா மாகா, ரிரீ / சா; ; ; / , நிதா, நிசா //
தத்துவ மறிந்தில னே / __ __ //

## அனுபல்லவி

;,நீத நீ சாசா சாசா / ;,காரிகா / கரிசாசநிசா //
சத்குரு வையடையத் / தேடிய / லைந்_தி_லேன் //
;,சாசாச் சரிகரி ரீசா / ; , ரிசநிதம / மா ; கமதநி //
சன்மார்க்க ஞா __ னம் / ஓர்ந்தும் உ /ணர்கி_லே_ //
சா,
ன்

## சரணம்

;,தாதநித தா, நிதா / ; , சநிதாம / மா,கரிகமா //
சித்தர்கள் போ லவே/ தேர்ந்துதெ / ளிந் தி_ட //
;,ரிகமாமாரிகா கரிசா / ; , சாரிகம / மா, கரிகமா //
ஜீ_வாத்மா பரமாத்மா / சேர்ந்து_சு / கி_த்தி_ட //

(அனுபல்லவி போல் பாட_வும்)

பக்தர்கள் போலவே / பாடிப்ப / ணிந்தி_ //
பக்தன் மீனாட்சி ஜென்மம் / தேற்றியீ / டேற்றிட //

இராகம் : ஆனந்தபைரவி
தாளம் : ஆதி

பாடல் எண்
5

ஆ : சகரிகமபதபச்
அ : சநிதபமகரிச

(20-ஆவது மேளகர்த்தாவாகிய நடபைரவியில் பிறந்தது)

## பல்லவி

கருணாநிதியே யென்கற்பனைக்கட_லே
காரணமாகிய வெளியே வெளியே

## அனுபல்லவி

கருத்திலிருந்துமே கருதப்பணித்திடும்
காரணகாரிய தொழிலுடையோனே

## சரணம்

அறிவுடையோரறிவில் அமர்ந்திடும் அய்யனே
ஆதியந்தமிலா வடிவே வடிவே
அறிவிலா மீனாட்சி ஜென்ம மீடேற்றிட
அறிவளிதிறமுடை முடிவே முடிவே

## பல்லவி

; பபாமபம காரீ சகரிநி/ சா, சாகாரி/ காகாமா; //
கருணா_நிதி யே_யென் / __ கற்பனை / க்கடலே //
; , கமப பாபா; தபபம / ; கம பா; / , ம மாபத் பமகச // கம
கா_ரண மா கி_ய / வெளியே வெளி__யே__ //

## அனுபல்லவி

; , சரிகாரி சா; சாரிச / நீ, சசகாரி / கா; மாமா //
கருத்திலிருந் துமே / __ கருதப்ப / ணித்திடும் //
; , கமபபா பா; தபபம / ; , கமபமா / மதபம கரிகம //
காரண காரி_ய_ தொழிலுடை_ / யோ__னே__ //

## சரணம்

; , பபபபா பாநித பமபா / ; , மபச்சா / ச்சா ; ச்நிச்சா //
அறிவுடையோரறிவில் / அமர்ந்திடும் / அய்யனே //
; , க்காரிச்சா; ச்சாச்நிநீ / ; நிநிச்சா; /, நிரிச்நிதபா //
ஆதியந்த __மிலா / வடிவே / வடி __ வே //
; மபாச்சா ரிச்நித பாபா / ; , மதபமா / பமகரி காகா //
அறிவிலா மீ __ னாட்சி / ஜென்மமீ / டே__ __ ற்றிட__ //
; கமாபமா ததபம கரிகா /; கமபா ; / மமாபத் பமகச // கம
அறிவளிதி_ற மு_டை_ / முடிவே / முடி __வே __ //

இராகம் : தோடி (8)
தாளம் : ஆதி

பாடல் எண்
6

ஆ : சரிகமபதநிச்
அ : ச்நிதபமகரிச

## பல்லவி

கடைக்கண் பார்த்திட ஏனினம் தாமதம்
கருணாகரி உமையே கனிவுடன்

## அனுபல்லவி

அடைக்கலம் புகுந்திட அவனியில் யாருண்டு
அருள்செய நீயுண்டு என நினைந்திட்ட என்னைக் — கடைக்கண்

## சரணம்

பிறவிப் பெருங்கடலைத் தாண்டிட அனுதினம்
பித்துப்பிடித்தலைந்தேன் சித்தம் இரங்கலையோ
பரவிய உன் புகழ் பாடிப்பசித்திருக்கும்
பக்தன் மீனாட்சி ஜென்மப்பசிப்பிணியே ஒழியக் — கடைக்கண்

## பல்லவி

; தநீசா, க்ரிச்நி தபதா / தநிசரிநிதபா / பாதப மகமா //
கடைக்கண் பா__ ர்த்திட / ஏ __னினம் / தா __ ம_தம் //
; பதாதபம காகா சரிபம / கா ; ; பா / தநிச்நி தபதம //
கருணா__ கரி உமை_ / யே க / னி __ வு_டன் //

## அனுபல்லவி

; நிச்ாதநீ ச்ாச்ாச்ா / ; , ரிக்ரிச்ா / ச்நிதா நீச்ா //
அடைக்கலம் புகுந்திட / அவனியில் / யா__ ருண்டு //
; , ச்ச்ரிச்ா ச்நிதா நீச்ா / ; தநீதபா / மாதப மகமா //
அருள்செயநீ __ யுண்டு / எனநினைந் / திட்டஎன்னைக் //

## சரணம்

பதாபா, பா மாதப மகமா / பா, த நீ தா / மாதப மகமா //
பிறவிப் பெருங்கடலைத் / தாண்டிட / அனு_தினம் //
பாதநீதபா மாதப மகமா / சரிகா; மா / பகமா தபதா //
பித்துப்பிடித்தலைந்தேன் / சித்தம் இ / ரங்க லையோ //

(அனுபல்லவிபோல் பாடவும்)

பரவிய உன்புகழ் / பாடிப்ப / சித்திருக்கும் //
பக்தன் மீனாட்சிஜென்ம / பசிப்பிணி / யே ஒழியக் //

இராகம் : புவனகாந்தாரி | பாடல் எண் 7 | ஆ : சரிமபநிச்
தாளம் : ஆதி | | அ : சநிதமகச

(20-ஆவது மேளகர்த்தாவாகிய நடபைரவியில் பிறந்தது)

## பல்லவி

இனியாகிலும் மனமிரங்காதா
ஈசனேயெனை ஆளவொண்ணாதா — இனி

## அனுபல்லவி

கனியாகிய பக்தி கண்டுமே
காணாதவர்போல்ஏ னோயிருப்பீர் — இனி

## சரணம்

தனிய னாகிய தன்மையறிந்துமே
தாபத் ரயங்கள் யாவும் ஓய்ந்துமே
பனிமொழிகள் பல சொல்லிய
பக்தன் மீனாட்சி யுக்தமடைய — இனி

## பல்லவி

; ; ; சாரீமா; பா / நீ ; ; தா / மா, மா, மா //
இனி யா கி / லும் ம _ / ன மிரங் //
கமககாச_ சாரீ மா; பா / பநிசா; சநி / தா, மா, மா //
கா — தா இனி யா கி / லும் ம _ / ன மிரங் //
கமககாச சாரீமா; பா / பநிசரீச்சநி / தா, மா,மா //
கா — தா இனியா கி / லும் ம _ / ன மிரங்
கமககாச சாசா, தா, நீ / சா; ; சா / ரீ, மா, பா //
கா — தா யீ சனேயெ / னை ஆ / ள வொண்ணா //
கமககாச
தா —

## அனுபல்லவி

; ; ; பா நீ, சா, நீ / சா; சா / ரீசரி மாமா //
கனி யா கி / ய ப / _க்தி ___ கண் //
க்மக்கா ச்ா; நீ; நீ / , தபா; மப / நிதா பா, மா //
டு__மே கா ணா த / வர்போல்ஏ / __னோ ந //
கமககாச_
டிப்பீ__ர்_ (இனி)

## சரணம்

; ; ; பா பா, பா, பா / பா, மா, மா / பமாகா, சா /
த னி ய னா / கிய தன் / மை_யறிந் //
சரீமா, பா மா, கா, கா / சா; சா / ரீமா; மா //
து__மே தாபத் ரயங் / கள் யா / _ வும் ஒய்ந் //
பா; ;
துமே

(அனுபல்லவிபோல் பாடவும்)

பனிமொழி / கள் ப / ல சொல்லி // ய
பக்தன்மீ னா / ட்சியுக் / தமடை_ // ய (இனி)

இராகம் : கேதாரகௌளை பாடல் எண் 8 ஆ : சரிமபநிச்
தாளம் : ஆதி அ : ச்நிதபமகரிச

(28_ஆவது மேளகர்த்தாவாகிய அரிகாம்போதியில் பிறந்தது)

## பல்லவி

அடிமையைக் காத்திட அவனியில் யாருண்டு
ஆதரித்திட வுன்றன் அருட்பலந்தானுண்டு

## அனுபல்லவி

மிடியகற்றிடாமல் நீ மேதினி மீதிருந்து
மேட்டிமை செய்தால் மீளவேவழியேது

## சரணம்

பலபலதெய்வங்கள் பார்த்தும் பயனிலையே
பாரினில் உனையலால் கதியேது அம்பா
பாவனனாக்கிட உனதருள் ஒளியலால்
பண்புறு வழியது இனியேது பர.

வெளிசுகமே தரவே எனது இசைதனில்
பரிபூர்ணக்ருபையே அருளவே நினையே
பரம்பொருளென தினம் நாடின மீனாட்சிமேல்
பரிவுகொள்ள வேண்டி நின்ற பக்தனாம் (அடிமை)

## பல்லவி

; ; மா பா; தா பா; பபாம மகாரி ரீ; ரிகமக / ரீமகாசநிசாரிசா; /
அ டி மையைக் கா ________ த்தி ட __ / _____ அவனியில் /
சாரிசநித பா; நிசாரி மகாரி //
யா ________ ருண்டு ______ //
; ; மாபா; தா பா; பாதப மக மகாரி ரீ; ரிகமக / _____ /
அடி மையைக் கா _____ / _______ /த்திட ______ /
________//
_______ //

; ; ; ரீ; மாகாசா ரீ; மா; நீ, சா, / ; ; ரீசா; நிதபா; /
ஆ ____ தரித்தி ட வுன்றன் / அருட்பலம் /
மாபாநிசரி சா; ரிசநித // பமகரி
தா ________ னுண்_ // டு

## அனுபல்லவி

; ; காசா; சாசா; பா; நீ; நீசா; / ; ; ; ரீ; ம்ாம்க்ரீ /
மிடி யக ற்றிடாமல் நீ / மே_தினி
ரீ; ரிக்ம்க்ாரீ க்ரிசா, //
மீதி_____ருந்து //

; ; ; நீசா ரீசா; சாரிச் நிததாபாபா; பா; / ; ; ; மாபாதாபா
மே_ட்டிமை செய்__________ தால் / மீ_ளவே /
பாதப மக ரீகரி ரீ; ரிகமக // ரீமகாச
வ_______ ழி_______ யேது //

## சரணம்

ரீரீரீ ரீ ; ரீரீ ரீ ; பமகா ரீமகசாசா / நீசாரீசா சநிரிசநிதபா /
பலபல தெய்வங்கள் பா ___ ர்த்தும் பயனிலையே / பா ___ ரினில்
உனையன்றி __ /
நீசா ரிமகா ரீ ; ரீரீ //
கதியே ___ து. அம்பா

சாரீமாபா தநிதாபாபா பமதபமகரீ ரீரீரீ / மா ; மாமா பாதபமாமா
பா __ வன னா __ க்கிட உனதருள் ஒளியலால் / பண்புறு வழி __யது /
ரீமா பா, த பா, த மா ; பாதப //
இனியே ___ து. ப _ ர _ //

மாமா ரீமா பாபம பாசா நிதபா; தாபா ; பாபா / பாசா சநிதாபாமாபாதா
வெளிசுக மேத __ ரவே எனது இசை தனில் / பரி பூ ர்ணக்ருபையே /
பமமககரிரீ ரீரீ மகாச //
அ_ ரு _ ள_வே நினையே __ //

மாபாநிசா ரீரீரீம்க் மா, கரீரீ கரிசாசாசா /
பரமபொருளென தினம் நா_டின மீனாட்சிமேல் /
நீசாரீசா; நித மாபா / தா, பா, மக மகாரி ரீ;
பரிவுகொள்ள வே ண் டி நின்ற பக்த //
மகா. சா
ணாம் _

இராகம்: கரகரப்ரியா(22)
தாளம்: ஆதி

பாடல் எண் 9

ஆ : சரிகமபதநிச்
அ : ச்நிதபமகரிச

## பல்லவி

மனமே அலையாதே இன்ப
மார்க்கமுற எளிய வழியிது நிலையே

## சரணம்

1. தினமே அவனை நீ தேடியே பாடு
திருவருள் வழியை திறம்பட நாடு
தனிமை நலமெனத் தன்னிலேதேடு
தத்துவ மெலாமுன் தன்வசம் யீடு

2. காமக் ரோதலோபமத மாச்சர்யங்கொல்லு
கடவுள் குடியிருக்கும் கோவிலாக் கொள்ளு
ஏமாறாமல் நீ பிறவியை வெல்லு .
இதைவிட யினியென்ன சொல்லச்சொல்கிறாய் சொல்லு

3. சத்தியம் பொறுமை தன்னைவிடாதே
சன்மார்க்க நெறியினைத் தாண்டிவிடாதே
பக்தர்களினமதைப் பழித்து நில்லாதே
பக்தன் மீனாட்சி சொல் பாகம் விடாதே

## பல்லவி

; தநீ நிதப காகா கரிரீ / மா ; ; ; / ; ; பா பா //
மனமே ___ அலை யா ___ / தே / யின்ப //
/ பா ; ; ; / ; ; பா பா //
" / தே / யின்ப //
" / த பா ; ; , / ; ; பா பா //
" / தே ___ / யின்ப //
; , நீதநீ தா, நி தாநீ / தாரீ நீசா / நிநிதபமபதநி // சா
மார்க்கமுறயெளிய / வழியிது / நி___லை யே ___// ___

## சரணம்

; பதா நீ, சாசா சாசா / ; , க்ாரிக்ரி / சாநிதாநிசா //
தினமே அவனை நீ ___ தேடியே / பா ___டு ___

; ச் சாச்சா சரிகா க்ரிசா/ ; தாரிச் தநி / தநிதபதா ; /
திருவருள் வ ___ ழியை / திறம் பட / நா ___ டு-

; நீ, நீ, நீ, நீ, நீ; நீநீ / ; , நீநிரீ / சநிரிச் நிதநிப //
தனிமை நல மென/ தன்னிலே / தே ___ டு ___

தநி, பாப பா தா, நீ, சா / ; ரிசா நிதா / தநிதப மபதநி //
- தத்துவ மெலா மு ன் / தன் வசம் / யீ ___ டு ___
சா-

இராகம் : ஹேமவதி (58)
தாளம் : ஆதி

பாடல் எண்
10

ஆ : சரிகமபதநிச்
அ : ச்நிதபமகரிச

## பல்லவி

பதம் பெறுவோமே பரமனைப் பணிந்து
பாதகங்களைத்துறந்து பதமலரிணையே சிந்தையிலணிந்து

## அனுபல்லவி

இதந்தரும்பாதம் இகபர போதம்
இணையிலா வேதம் என்றுமே தேடிய — பதம்

## சரணம்

ஆசையெனும் பெருங் கடல் கரைதாண்டி
ஆசானெனும் திரு அறிவினைத் தூண்டி
மாசற்ற தனிப்பெருங் கருணையை வேண்டி
மாசிலா மீனாட்சி சொல்லதை யண்டி — பதம்

## பல்லவி

; பதாநிதா பா ; பா ; / ; பா, மா, கா, ரீ / கா மா பா; //
பதம்பெறு வோ மே / ப ர ம னைப் / பணிந்து //
; பதா நிதா பதரிச் நிதபா / ; பா, மா, கா ரீ / கா மா பா ;
பதம்பெறுவோ மே / ப ர ம னைப் / பணிந்து //
; பதாநிதா பாதா பதநீ தநீச்ாநித / பா பா, மா, கா, ரீ / கா மா பா; //
பதம் பெறுவோ — — — / மே ப ர ம னைப் / பணிந்து //
; , பாம கா ரீரீ கா ரீ / சாசரி கமபத / நீ ரீச்நிதபா // பம
பாதகங்களைத்துறந் / து பத மலரிணை/ யேசிந்தையிலணிந் து

## அனுபல்லவி

; மா, பா, தா, நீ, ச்ா ; ; ச்ா / ரீ ; ச்ா ; / நீ ; தா ; //
இதந்தரும் பா தம் / அ — — —
பம - மா, பா, தா, நீ, ச்ா ; ; ச்ா / ரீக்ரீ ரீ ச்ாரீச் ச்ா/ நீச்நிநீ
- இதந் தரும் — பா தம் / அ — அ — / அ — அ —
தாநித தா//
அ — —
பம - மா, பா, தா, நீ, ச்ா ; ; ச்ா / ; நிதா நிச்ா / நிச்நித பதமப //
- இதந் த ரும் — பா தம் / இ க பர / போ — — தம் //

; ரீ, ம்ா, க்ா, ரீ, க்ரி ரீ சா ; / ; , தா நி சா / நிச்நித பா பம //
இணை யிலா வே — தம் / என்றுமே / தே — டிய — // பதம்

## சரணம்

; , பா ப பா பா ; ; பாபா/ ; ப தா நி சா / நிச்நித நித பா //
ஆசையெனும்பெருங் / கடல்கரை / தா — ண்டி //
; , பா ப பா பா; நிதபா / ; பதாநிசா/ பதரிச் நிதபா//
ஆசையெனும் பெருங்/ கடல்கரை / தா — — ண்டி//
; , ரீபமகாரீ ரீ; சாசா / ; சரிகமா / பா; பா; //
ஆசா — னெனுந்திரு / அறிவினைத் / தாண்டி //

(அனுபல்லவிபோல் பாடவும்)

மாசற்ற தனிப்பெருங் / கருணையை / வேண்டி //
மாசிலா மீனாட்சி / சொல்லதை / யண்டி // பதம்

இராகம் எதுகுலகாம்போதி. பாடல் எண் 11 ஆ : சரிமபதச்
தாளம். ஆதி. அ : ச்நிதபமகரிச

(28 ஆவது மேளகர்த்தாவாகிய அரிகாம்போதியில் பிறந்தது).

## பல்லவி

ஆடக்கற்றது எங்கே அய்யா.
அம்மை சிவகாமியுடன் நீர்

## அனுபல்லவி

பாடற்கினிய பொருளே-உண்மைப்
பக்தருளம் களிக்கப்பாரினில் நாடகம்

## சரணம்

கங்கை திங்கள் முடியிலாட
செங்கையில்மான் மழுவாட
எங்கள் வினை பறந்தோட
இன்னிசை மீனாட்சி யெண்ணித்தொழுதிட

## பல்லவி

சரிமா மாமா மகமா; கம/ பா; ; பத/தபமா; மகாச//
ஆ_டக்க ற்ற_துயெங்/கே ஐ_/யா_நீர்_//
சரிமா மாமா மகமா ; பத/ பா; ; பத / ; பததபமா//
ஆ_டக்கற் றதுயெங் / கே / ; ஐ_யா_//
; தா பா தா; தா; தா/; தச நீ, த/தாநித பாபா//
அம்மைசி வ கா/ மி__/ யு__டன் நீர்//

## அனுபல்லவி

பதச்ா ச்ாச்ா ச்ாச்ா; தத/தச்ாநீ, தா/தாநித பாபா//
பா_டற்கி னியபொரு/ளே__/__உண்மைப்//
மா; மாகமபாபா மபதா/தாமபதச்தப/பபமகமககச//
பக்த்தரு_ளம் க_ளி/ க்கப்பா_ரினில்/ நா_ ட_ _ கம்//

## சரணம்

; மகமா, மா, மா; மக/காமபா; , / ; பததபமா//
கங்கை திங்கள் மு_/ டி__யி/லா_ட//
; தா பா தா; தா;தா/தச்நீ, ததா/நித தா, பா,//
செங்கையில்மான் ம/ழு__ஆ/__ __ ட//

(அனுபல்லவி போல் பாடவும்)

எங்கள் வினை/ பறந்/தோட//
இன்னிசைமீனா/க்ஷி யெண்ணித்தொ/ழுதிட//ஆ

இராகம்: இந்தோளம்
தாளம்_ஆதி

பாடல் எண்
12

ஆ : சகமதநிச்
அ : ச்நிதமகச

(20ஆவது மேளகர்த்தாவாகிய நடபைரவியில் பிறந்தது)

## பல்லவி

மால்மருகாநின் மலரடிபணிந்தேன்
மறுபிறவி யொழித் தருள்புரிவாய் குகா

## அனுபல்லவி

வேல்முருகாயின்ப வீடருள்தாயகா
வேதவேதாந்தங்களும் நாடிடும் நாயகா

## சரணம்

1. ஆணவம் மாயை கன்மமெனும்பெரும்
அகழியுள்வீழ்ந்து ஆழ்ந்திடாது அருள்
காணவொணாததோர் கற்பனைக்கடலே
கருணையே உருவாய் அமைந்தநற்பொருளே

2. மும்மலமாம்பெருங் கடலினுள்மூழ்கி
மூழ்கி அனுதினம் தாழ்வதடையாமல்
இம்மலமாயை அறுத்தருள்வாய் கோனே.
ஏந்துகொள்வாய் உலகம் தோன்றநின்றவனே

## பல்லவி

; , மாமமா கசா , ; சா/; சசாசசா/தா நீ் சா; //
மால்மரு கா_நின்/ மல ரடி /பணிந்தேன்//
; , மாமமா க்மதகமகசா/ ; சகா சசா/தாநீ்சா ; //
மால் மரு கா _ நின் /மலரடி/பணிந்தேன்//
; , மமா மமா கமதநி ச்ாச்ா/ ; நிச்நிதமா / மகதமகசசா //
மறுபிறவி__ ஒழித்/தருள்புரி/வா_ய்கு_கா//_
மா, மமா மம: கமதநி ச்ாச்ா / ச்க்ச்நிச்நிதநி/தமதமகசசா//மா,
மறு பிறவி ஒழித் /த_ருள்-பு_/-ரி__வாய்கு //கா_

## அனுபல்லவி

; கமா தநீ ச்ா; ச்ாச்ா/ ; , ச்க்ச்ச்ா/தா;நீச்ா//
வேல்முருகா இன்ப/ வீ__ருள்/தாயகா//
; , ச்ம்க்ச்ா நிதநீ ச்ாச்ா/; நிச்நிதமா/மகதமகசசா//மா
வேதவே தாந்தங்களும் / நாடிடும் / நா. ய. கா

## சரணம்

; , மாமமா மா; ; மா/ ; , கமகசா/சா; கநிசா//
ஆணவம் மாயை / கன்மமெ/னும் பெரும்//
; , சகசசா நிதா, நீசா/ ; ; சாசமா/மா; தகமா//
அகழியுள்வீ_ழ்ந்து/ஆழ்ந்திடா/து அ_ருள்//

(அனுபல்லவிபோல் பாடவும்)

காணவொணாததோர்/ கற்பனைக்/கடலே//
கருணையேஉருவாய்/| அமைந்தநற்/பொருளே//_மால்
/

இராகம். சக்ரவாகம். (16) பாடல் எண் 13 ஆ : சரிகமபதநிச்
தாளம். ஆதி. அ : ச்நிதபமகரிச

## பல்லவி

இதுவரையும் உனையே பணிந்திலேனே
ஏதுமறிந்திலேனே வீணன் நானே

## அனுபல்லவி

சதுர்மறைதேடிடும் தற்பரபோதனே
சமரச ஞான தத்துவ சீலனே

## சரணம்

விதியதுவிதியது என்றுமேதானே
வேதனைப்பட்டு வெம்பினேன் நானே
மதியிதுஎது வென்ற மார்க்க மறிந்திடாது
மதுரமொழி மீனாட்சி மர்மம் தெரிந்திடாது

## பல்லவி

; , தநிதபா மா பமகரி ரீ நீ கரி/சா ; ; , ரி / சரிகம பமபா//
இதுவரையும்____உனை/யே_ப/ணிந்தி_லே_னே//
; , நீதபா மகபமகரி, சாநிகரி/சா ; ; சரி/கமபா கமபத//நிச்சா
யேதும நிந்தி__லே__னே வீ_/_ணன்நா_//னே__

## அனுபல்லவி

; , மபதநீ ச்சா, , ச்ரிரிசா/ ; , ச்ரிக்கா/ப்மக்ரி ரீ கரிசா//
; சதுர்மறைதே டிடும்/ தற்பரபோ/__தனே //

; , ச்நிரிச்ா நிரிச்நித் தாபா/ ; , தநிதபா/மகபமகரிசரி//
சமரச ஞா__ _ன/தத்துவ/சீ__ _ல_//
கமப
னே

## சரணம்

; , பபபபா பாபா , பபா/ ; , நிதபா/மகபமகரிரி//
விதியது விதியது/ யென்றுமே/தா__ _னே//
; , சாநிகரி சா, நிரிசரி/ ; , சரிமமா/பா, ம தாபா//
வேதனைப்ப__ட்டு/வெம்பினேன்/நா__னே//

(அனுபல்லவி போல் பாடவும்)

மதியிது எதுவென்ற/ மார்க்கம/றிந்திடா து//
மதுரமொழிமீனாட்சி/ மர்மம்தெ/ரிந்திடா து//

இராகம். சங்கராபரணம்(29) பாடல் எண் 14 ஆ : சரிகமபதநிச்.
தாளம். ரூபகம் அ : ச்நிதபமகரிச.

## பல்லவி

தினமே சிவன் நாமமே துதி
மனமே நீயனு

## அனுபல்லவி

முனமே பல நாட்கழிந்தாலும்
முன்னவர்க்கும் முன்னான முதல்வனை

## சரணம்

ஜெனன மரணப்பயம் நீங்கும்
ஜீவன் முக்திநிலைதானோங்கும்.
எனதெனவுளயாவும் நீங்கும்
இன்பம் மீனாட்சியின் சொல்லோங்கும்

### பல்லவி

சாரீ கா; காகா//கரிபம கரிசா சாநி//
தினமே சிவன் //நா__ம_மே துதி//
தாநீ சா; ; ; // சரிகம பா கமகரிசநி//
மனமே // நீ__ய__ று_//

### அனுபல்லவி

; கமாபாதநிசா// ; நிசாரிசாச்தநி//
முனமே_பல// நா_ட்கழிந்தா_//
ச்ா ச்ா, நீதாபாபா//; ச்நிதபபமகரிசநி//
லும் முன்னவர்க்குமுன்//னா__னமுதல்வ_னை//

### சரணம்

; கமாபபா பாபா// ; மகா மகா மா ; //
ஜெனனமரண//பயம்நீங்கும்//
; , மாககா மககரி// சச கா, மா, பா;//
சிவன்முக்தி__//நிலை தானோங்கும் //

(அனுபல்லவிபோல் பாடவும்)

எனதெனவுள// யாவும் நீங்கும்//
இன்பன் மீனாட்சி//யின்சொல்லோங்கும்//

இராகம்.சாரங்கா. பாடல் எண் 15 ஆ : சரிகமபதநிச்
தாளம்.ஆதி. அ : ச்நிதபமரிகம்ரிச

(65-ஆவது மேளகர்த்தாவாகிய மேசகல்யாணியில் பிறந்தது)

### பல்லவி

சொற்பதங்கடந்த துரியமெய்ஞ்ஞானமே
தூலசூக்கும காரணகாரியமே.

### அனுபல்லவி

நற்பதமடைய ஞானம தருளே.
நியாய நடுவினில் அமர்ந்திடும் பொருளே.

## சரணம்

கற்கண்டே யின்பக் கனிரசமே யென்றன்
கருத்திற்குணவே கற்பகமே தமிழ்
சொற் கொண்டே நின்பொற்பதத்தொண்டே
செய்த மீனாட்சி ஜென்மம் உய்யவழியருளே//

## பல்லவி

; , சாசபா ; , பபா பா/மநிதபா/பமரிரிகமரி //
சொற்பதங்கடந்த/துரியமெஞ்/ஞா_ன_மே_//_
சா, ச்சாச்தநி சாரிசநித பாபம / ; , ச்நிதபா/பமரி ரிகமரி//
தூலசூ_ ___க்கும_/கா_ரண/கா_ரிய_மே_//
சா,

## அனுபல்லவி

; , ச்ரச்சா ச்நிச்நி தபபா/ ; , பமபதா/ச்சா; ச்சா//
நற்பத ம___டைய/ஞானம/த ருளே//
; , ரீநிச்சா ச்நிநிதபபா/மநிதபா/பமரி ரிகமரி//சா,
நியாயந டு_வினில் /அமர்ந்திடும்/ பொ_ரு_ளே_//___

## சரணம்

; பா, பா, பா; நிதபா/; மநிதபா/பமரி ரிகமரி//
கற்கண்டே யின்பக்/கனிரச/மே_/யென்றன்//___
சா, மநிதபா பமரி கமரி/சா, சாசசா/பா; நிதபா//
கருத்திற்குணவே___/கற்பக மே த_மிழ்//

(அனுபல்லவி போல் பாடவும்)

சொற்கொண்டே_நின்/ பொற்பத/ த்தொண்டே_//
செய்த மீனாட்சிஜென்மம்/ உய்யவ/ழிய_ருளே//சொற்

இராகம். இராமப்ரியா.(52) பாடல் எண் 16 ஆ : சரிகமபதநிச்
தாளம் ரூபகம் அ : ச்நிதபமகரிச

## பல்லவி

ஈசனன்பர்க் கிணையெவரே
இருஉலகிலும் ஜெக___தீச

## அனுபல்லவி

நேசன் நினைப்பவர் உளம் நிறைந்த
நிகிலபுவன அகில ஜெக_தீச

## சரணம்

பாசபந்தம் தனையறுப்பான்
பாவனமுறச் செய்திடுவான்
தாசன் மீனாட்சி துயரறுப்பான்
தண்ணருள்புரியும் அண்ணலாம் ஜெக_தீச

## பல்லவி

பா; பமகரி கரிசா//சரிகம பாமாபா; //
ஈ ச_னன்_பர்க்// கி_ணையெவரே//
பதநிதபமபமகரிசா//சரிகம பாமா பா; //
ஈ_ச_னன்_பர்க்//கி_ணையெவரே//
மபதப பதநீ தநிச்நி//ச்சா; ; ரிச்நிதபம//
இரு_உலகி__லும் ஜெ_க_//
பதநிச் ரிச்நித பமகரி//சரிகம பாமாபா; //
ஈ_ச_னன்ப_ர்க்//கி_ணையெவரே//
பதநீ தநிச்சா ச்நிரீ//ச்சா; ; ரிச்நிதபம//
இருஉலகி_//லும் ஜெ_க_//

## அனுபல்லவி

பமபா தாதநி ச்சாச்சா//ச்சாச்சாச்சாச்சாச்சா//
நே_சன்நி_னைப்ப//வர் உ ளம் நிறைந்த//
ச்ரிக்ர் க்ாப்ம் க்ரிச்சா//ச்நிரீ ச்சா ரிச்நிதபா//
நி_கி லபு_வ_ன//அ_கில ஜெ_க//

## சரணம்

பா; பமகா ரீசா//; சரீகமா பா;//
பா ச_பந்_தம்// தனையறுப்பான்//
மபதா பதநீ தாபா//ததபபாமகரி சா;//
பா__வ_ன முறச் //செய்__திடுவான்//

(அனுபல்லவி போல் பாடவும்)

தாசன் மீனாட்சி துயரறுப்பான்//
தண்ணருள்புரியும் அண்ணலாம் ஜெக//

இராகம். கோகிலப்ரியா(11) பாடல் எண் ஆ : சரிகமபதநிச்
தாளம். ரூபகம். 17 அ : ச்நிதபமகரிச

## பல்லவி

கண்டால் கலிதீருமே
கனகசபேசனை

## அனுபல்லவி

அண்டாதி தேவர் போற்றும்
ஆனந்தத்தாண்டவனைக்

## சரணம்

பதஞ்சலிவியாக்ர பாதர்தினம்
பார்த்து மகிழும் பாதம்
நிதம் துதிசெய்பக்தர்கள்
நினைவினில் ஆடும்பாதம்

## பல்லவி

; சரி கா; மகமா// ; பா தாநீச்ா; //
கண்டால் க_லி// தீ _ருமே//
; ச்ா ச்நிதபா, மா//கா; ரீசா//
கன_கச// பே ச னை//
; சரிகா ; மகமா// ; பாதாநீச்ா; //
கண்டால் க_லி// தீ_ருமே//
;ச்ாச்நிதபா, மா//; ச்நிதப பமகரி கரி //
கன_க ச//பே_ச__னை_// (கண்டால்)

## அனுபல்லவி

; பா தா, நீ, ச்ா// ; ச் ரி் க்ா, ரி், ச்ா//
. அண் டா தி / . . தே வர் போற்றும்/
ச்ா ; ; ச்நி தா பா // பா, மா, கா, ரீச//
ஆ . . னந் . . தத் தா ண் ட வனை

## சரணம்

; பபாபபா பா, ப//ா, பாமா, கா, ரீ//
பதஞ்சலிவியாக்ர// பாதர் தி_னம்//

; , சரி காரி சாசா//; சரிகா, மா,மா//
பா_ர்த்து மகிழும்// பா___ ___ தம்//

(அனுபல்லவிபோல் பாடவும்).

நிதம்துதி// செய்பக்தர்கள்//
நினைவினில்// ஆடும்பாதம்//__கண்டால்

இராகம்: தர்பார் பாடல் எண் ஆ : சரிமபதநிச்
தாளம்-ஆதி. 18 அ : சநிதபமரிகாகாரிச

(22_ஆவது மேளகர்த்தாவாகிய கரகரப்ரியாவில் பிறந்தது)

## பல்லவி

கருணாகரப்பரம் பொருளே யெனைநீயே
கண்பார்த்தருள்வாயே

## அனுபல்லவி

மருள்நாசஞ்செயும் மாண்புடைப்பொருளே
மான்மழுவேந்திய மாதவப்பொருளே

## சரணம்

சொல்லால் விளக்கொணா சோதிப்பரம்பொருளே
துரியமெஞ்ஞானத்து ஊறும் சுகப்பொருளே.
பல்லாயிரம் தேவர் போற்றும் பழம்பொருளே
பக்தன் மீனாட்சி கண்கள் காணவிழைந்தருளே

## பல்லவி

; தநீபா, பாபா பாபா/; மபதநிபா/ ரீ, ம ரீ, ம ரீசா//
கருணா கரப் பரம்/ பொருளே__/ யெனை___ நீயே//
; ரிமாபா, தாநீபாமா/பா ; ; ; / பமரிமரிசாரி//
கண்பார்த்தருள்வா_/யே /____ __//__

; தநீபா, பாபா பாபா/; மபதநிச்ப/ரி, ம ரி, ம ரிசா//
கருணா கரப்பரம்/பொருளே__/யென்ன நீயே//
; ரிமாபா, தாநீபாமா/பா; ; ; / பமரிமரிசாரி/
கண்பார்த்தருள்வா/யே /___//
மப

## அனுபல்லவி

; தபா சா, சா; ரிரி/; ரி, ம் ரி, ம் ரிச்/ரிச்நிச்தாபா//
மருள் நாசம்செயும்/மா_ண்புடைப்/பொ_ருளே//
; தரிசரி நீநீ, தபா/மபதநீபமா/ ரி, ம ரி, ம ரிசரி //
மான்மழு வே_ந்திய/ மா__ தவப்/பொரு_ _ளே//__
மப

## சரணம்

; , தாதாப பா; பாபா/ ; , மபதாப/ மபமரிரிசா//
சொல்லால் விளக்கொணா/ சோதிப்ப /ரம்பொருளே//
; , ரிமபதா ரிச்நிச்தாபா/ ; , மபதநிப/ மரிமரிரிசா//
துரியமெஞ்ஞா__னத்து/ ஊறும்சு/கப் பொருளே//

(அனுபல்லவிபோல் பாடவும்)

பல்லாயிரம் தேவர்/ போற்றும்ப/மும்பொருளே//
பக்தன்மீனாட்சி கண்கள்/காணவி/ழைந்தருளே//

இராகம். மோகனம் — பாடல் எண் 19 — ஆ : சரிகபதச்
தாளம்ஆதி. — அ : ச்தபகரிச

(28 ஆவது மேளகர்த்தாவாகிய அரிகாம்போதியில் பிறந்தது)

## பல்லவி

முன்பேபல பெரியார் முழுமுதலிதுவென
மொழிந்ததோர் பொன்மொழி அறிந்தயோமனமே

## அனுபல்லவி

அன்பேசிவமென அனுபவத்தாலுணர்ந்து
அவனிமுழுதும்நிறை பரம்பொருளிதுவென

## சரணம்

அன்றுதிருமூலரும் அறிவுடையோர்களும்
ஆய்ந்துணர்ந்து கண்ட முடிவின் முடிவென்றார்
இன்று மீனாட்சி சொல் உண்மையும் இதுவென்று
என்று தெரிந்துநீ இறைவனை அறிவையோ

## பல்லவி

; ; ; கா தா ப கா, ரீ சா; சா; சா; சாரிச தா/ ; ; ; தாதாசாரீ;
முன்_பே பல பெரி __ யார்/ முழு முத
கா ; கா ; ; ரீ கா ; //
லி_து __வென
; ; ; காகாபாதா; ச்ா; ; ; ; தாச்ா; / ; ; ; தாச்ாதாபா ; /
மொழிந்த தோர் பொன்__மொழி ___ அறிந் த யோ
காகாதாபா காபா காரீ
ம _ன __மே
காபாதா_ச்ாதா, பா, பா கா; கா; காரீச்ா; / „ / „ //
முன்_பே_பலபெரியா__ர்/ __ ஷ __

## அனுபல்லவி

; ; ; கா; பா; தா ச்ா; ; ; ச்ா; ச்ா; / ; ; ; ச்ாரீ ச்ாரீ ச்ா
அன் பே சிவ _ மெ ன __அனுபவத்__
ச்ா; ரிச் தா தாபாதா; //
தா_லு_ணர்ந்து//
; ; ; ரீக்ா ரீக்ா ரீ ச்ா; ரிச்தா; தாச்ா; / ; ; பதரிச்ா, தாபா;
அவனிமுழுதும்___நிறை / பரம்__பொ ருள்
காகாதாபா காபா கா ரீ//
இ-து-வெ-ன - - - - -

ாபாதா

## சரணம்

; ; ; கா; கா கா; கா; கா; ; ரீகா; /; ; ; காதாபாதாபா/
அன்றுதி ரு மூ__லரும் ____ அறிவுடை
கா ; தபபா கா; காரீ, //
யோர்__க ளும்

; ; ; காபா, கா, ரீ சா; ; ; ; சாரிசதா/; ; ; தாசாரிகாரீ/
____ ஆய்ந் துணர்ந்து கண்ட ____ முடி வின்மு
கா; ; ; ; ரீ கா; //
டி ____ வென்றார்

(அனுபல்லவி போல் பாடவும்)

இன்றுமீனாட்சி சொல் / உண்மையும்/ இதுவென்று//
என்று தெரிந்து நீ/ இறைவனை /அறிவையோ//.

இராகம். சுத்ததந்யாசி | பாடல் எண் | ஆ : சகமபநிச்
தாளம்.ஆதி. | 20 | அ : ச்நிபமகச

(20 ஆவது மேளகர்த்தாவாகிய நடபைரவியில் பிறந்தது)

## பல்லவி

ஜென்மம்யேனையா சிவனைநினையா
ஜென்மமேபாரில் சுமைதானையா

## அனுபல்லவி

மன்மதவிகார மான ஜெகமீதில்
வந்துபிறந்து கண்டதேதையா

## சரணம்

இந்த ஜென்மம்தந்த ஈசனை மறந்து
இரவுபகலாய் யேதே தோநினைந்து
பந்தபாசமற பக்தன் மீனாட்சியின்
பண்மொழியறிந்து நன்மையடையா

## பல்லவி

; ; ; சாசா கமபாமா/ பா; ; பா/ மா, மா, மக// ச/
ஜென்மமே_னை/யா சி/ வனை நி//னையா___
பமகசா, சாசா கம பா மா/பா; ; பநி/ நிச்ாநிபமமக//
ஜென்மம்யே_னை/யா____ சி_/வ____ னைநி_// னை_யா

பமகசாநி சாசாகமபாமா/பமகசகமபநி/நிச்ாநிபமமக//
ஜென்மம்யே_னை/யா___சி_/வ___ னைநி_//னை_யா_
பமகசாநி மா பா, மா, கா, சக/நிசா ; , சா / சாகம பாமா//
ஜென்ம_மே பா_/_ரில் சு/ மைதா_னை// ___
பமகசகம
யா__

## அனுபல்லவி

; ; ; பா நீ ச்ா; நீ/ ச்ா, ச்ா, க்ா/ ச்ா ம்ா, ம்ா, //
மன்மத வி/ கா ர மா/ ன ஜெக// மீ _தில்
க்ச்ா, ச்ா ச்ா, க்ம்க்ச்ா, நி/ ச்ா; ; பநி/நிச்ாநி பா, ம//
வந்து_பிறந்/து கண்/ட ___ தேதை//
பமகசகம
யா ___

## சரணம்

; ; ; பாபா பா; பா/பா, பா, பநி/பா மா, மா, //
இந்த ஜென்மம்/ தந்த யீ_/ச னை ம//
கா, கா, மகபமகசா, நீ /சா; நிச/கா, மா, மா//
றந்து இரவு பக/லாய் யே/தே தோநி//
பா, பா,
னைந்து

(அனுபல்லவி போல் பாடவும்)

பந்தபாச /மற பக்/ தன் மீனா//ட்சியின்
பண்மொழிய/நிந்துநலா/மையடை_// யா

இராகம். ஆரபி
தாளம். ஆதி

பாடல் எண்
21

ஆ : சரிமபதச்
அ : சநிதபமகரிச

(29_ஆவது மேளகர்த்தாவாகிய தீரசங்கராபரணத்தில் பிறந்தது)

## பல்லவி

நடனமாடிடும் பொற்தமே யென்றும்
நம்மைக்காத்திடும் பாதமே

## அனுபல்லவி

திடமதாய் அன்பர் திருவுளமதனிலே
திகைப்பறவேதினம் திந்திமி திமியென

## சரணம்

1. தும்புருநாரதர் தோத்திரம்பாடிட
தூய்மைமிகுந்தொண்டர் துயர்பறந்தோடிட
அம்பலந்தனிலென்றும் ஆனந்த நடமிட
அம்மைசிவகாமியும் கூடயிருந்திட

2. யானெனும சந்தை தானேயொழிந்திட
யாதினுமே சிறந்த யின்பம் பிறந்திட
கோனெனுந்திறமே கண்டு தெளிந்திட
குணமுடை மீனாட்சியின் உள்ளங் களித்திட

## பல்லவி

தாபாபா பா ; பாபா/மபதப பமாக/ ரீமகரிசரீ
நடனமாடிடும்/ பா ___த___/ மே___யென்றும்//
" " /மபதச்ச்நிதப/மாமகரிசரீ//
" " / பா ___த___/ மே___/யென்றும்//
" " / மபதரிச்நிதப/ மாமகரிசரீ//
" " / பா___த___/ மே___யென்றும்//
; ரீ மகரீ சநிதா ரிசரீ/ரிமபாமகரிச/ ரீ; மகரிச//
நம்மைக்கா___த்திடும்/பா___த___/மே___ ___// நடன

## அனுபல்லவி

; மா பாதா ச்ா; ச்ாச்ா /ச்ரீம்க்ரீச்ா/ ரீரீரீரீ//
திடம தாய் அன்பர்/தி_ரு_வுள/மதனிலே//
; தரீச்ச்ா ச்நிதாபாபா/மபதச்ாநிதப/மாமகரிசரீ//
திகைப்பறவே_தினம்/திந்___திமி/திமி_யென//நடன

## சரணம்

; , ஓாத்தா பா; பாபா/மபதாபாபா/மா, கரிசரீ//
தும்புரு நாரதர்/தோ_த்திரம்/பா__டி__//
" " /மபதச்ாநிதப/மா, கரிசரீ//
" " /தோ_த்திரம்/பா_டி__//

„ „ /சதரிச்நிதப/ மா, கரிசரீ//
„ „ / தோ__த்திரம்/பா__டிட//
; , ரிபமமா மகரிரீ, சா/; ரிமாபதா/ ச்நிதாதாபா//
தூய்மைமிகுந்தொண்டர்/துயர்பறந்/தோ__டிட//
; தா, ச் சா ர்ர்ர்ர்/சர்ம்க் ரீசா/ர்ர்ர்ர்//
அம்பலந் தனிலென்றும்/ஆனந்த/நடமிட//
; , ரீச்ாச் ச்நிதா பாபா/மபதச்ாநிதப/மா, கரிசரீ//
அம்மைசி வ_காமியும்/கூ__டயி/ருந்தி__ட//_நடன

இராகம். வாசஸ்பதி (64) பாடல் எண் 22 ஆ : சரிகமபதநிச்
தாளம். ஆதி அ : சநிதபமகரிச

## பல்லவி

நாதசுகமளியே நலமுறவே
நாவினிலே உறையே சரஸ்வதியே

## அனுபல்லவி

கீதமறைமுடிவே ___ சங்
கீதமய வடிவே சுரஸ்வர

## சரணம்

ஒலிவடிவாய் நின்று உலகினை யாண்டிடும்
உண்மைப்பொருளே நின் திறமறிந்திடயினி
வலுவினில் வந்தென்றன் வல்வினைப் போக்கி
வகையுற மீனாட்சி சொல்லினை நோக்கி

## பல்லவி

பதநீ தாதா பா; பகமா/பா; ; தா/ததபா பாபா//
நா_த சுகமளி_/யே ந/ல_முறவே//
பதநிச்ாநிதா பா; பகமா/பா; ; தா/ததபா பாபா//
நா__தசு க ம_ளி/யே ந/ ல_முறவே//

பதரிச்நிததா பா; பகமா/பா; ; தா/ததபா பாபா//
நா__ _ தசு க ம_ளி/யே நு/ல_முறவே//
மபதநீதபா பமதபாகரீ/சா; ; சா/ரீகாமாபம//
நா__விளிலே__உறை/யே ச/ரஸ்வதியே//

## அனுபல்லவி

; , பாதநீ ச்சா; ச்நித்நி/ச்சா; ; ; / ; ; ; ச்சா//
கீதம றை மு_டி_/வே / சங்//____
; , ரிரிச்சா ச்ச்நித பாநித/பா; ; ; / பமகரி கமபத//
கீதம ய__வடி_/வே/ ஸ_ஸ்வ_ர//

## சரணம்

; தநீதநீ தா;தாதா/; பா, தா, நீ, ச்சா,/ நிச்நிதபாபா//
ஒலிவடி வாய் நின்று/உலகினை/யா_ண்டிடும்//
; , நீதபா பமதபபமகா/; கமாபபா/பதநீ தாபா//
உண்மைப்பொருளேநின்/திறமறிந்/தி__யினி//
; மபத நீ, ச்சா; ச்சாச்சா/; , நீச்ரிச்/; நிதாநிச்சா//
வலுவினில் வந்தென்றன்/வல்வினைப்/போக்கி__//
; நிரிச்சா ச்ச்நிததநிச்சா/; , நீநீத/ பமகரிகமபத//
வகையுற மீ__னாட்சி/சொல்லினை/நோ_க்கி_//

இராகம். ஹம்ஸவிநோதினி
தாளம். ஆதி.

பாடல் எண்
23

ஆ : சரிகமதநிச்
அ : சநிதமகரிச

(29_ஆவது மேளகர்த்தாவாகிய தீரசங்கராபரணத்தில் பிறந்தது)

## பல்லவி

குலந்தரும் செல்வம் தந்திடும் மற்றும்
கோரியவரங்கள் எல்லாமளித்திடும்

## அனுபல்லவி

பலந்தரும் பக்தி முக்தியளித்திடும்
பாசபந்தம்போக்கிப் பாவனனாக்கிடும்.

## சரணம்

1. அன்புங் கடவுளும் இரண்டல்லவொன்றே,
அதையே தெரிந்து நீ ஆவலா யின்றே.
துன்பமேயானாலும் சுகமேயானாலும்
தோத்திரம் செய்ராம ராம ராமாஎன்றே

2. மங்களந்தந்திடும் மனதையடக்கிடும்
சிங்காரமானதொரு ஜீவனம் தந்திடும்
சங்கையைப் போக்கிடும் சன்மார்க்க மாக்கிடும்
பங்கமிலாத நற்பதத்தைக் கொடுத்திடும்

3. சத்திய ஞான தாகமடைந்திடு
சத்குருவையடையத்தக் கோரைத்தேடிடு
பக்திசெய்து இன்பப் பாதையடைந்திடு
பக்தன் மீனாட்சி சொல் பாகமறிந்திடு

## பல்லவி

; சசா சசா ரி; ரி; ; ; , காககா / கா; மா; // |
குலந்தரும் செல்வம்/தந்திடும்/ மற்றும்//
; , காககா ரீமகரிசசா/; , நிசாரீ/ கரிகரிசாசா//
கோரிய வரங்_கள்/ எல்லாம/ளி__த்திடும்//

## அனுபல்லவி

; மமாமமா மா, மாமா/; , காமதா/ நீ; சா சா//
பலந்தரும் ப_க்தி/முக்திய/ளித்திடும்//
; , சாச்சா நீ, தா, மா/; , கா, கரி/ரிகமகரிச்சா//
பாசபந் தம்போக்கி/பாவன/னா_க்கிடும்//

## சரணம்

; . மாமாம மா; மாமா/,,ககாரி /ரிகமக கரிசா//
அன்புங்க ட வுளும்/ இரண்டல்ல/ஒன்_றே__

; , நிநிசாச ரீ; ரிகரிக/; கா, ககரி /ரிகமக கரிசா//
அதையே தெரிந்து நீ —ஆ வ லா_யின்__றே//
; , மாமமா தமா, மா; / ; கா, மா, தா, நீ, /ச்சா, ச்சா, ச்சா//
